27.09.2023
O.S.No.154/2013

வா.சா.2.திரு.செல்வம்_த.பெ.பழனி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. நான் ஆமுரில் குடியிருந்து வருகிறேன். நான் ஆமூர் கிராமத்தில் குடியிருப்பதற்கு எந்த ஆதாரமும் தாக்கல்செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 8/3 ஆகும். சர்வே எண் 8/3 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 4-1/2 ஏக்கர் ஆகும். சின்னகருப்பன் என்பவர் ஒரு வழக்கறிஞர் என்றால் சரிதான். அவர்கள் குடும்பம் ஆரம்ப காலத்தில் இருந்தே மதுரையில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் குடும்பத்தினர் விவசாயத்தை மட்டுமே தொழிலாக வைத்துள்ளனர் என்றால் சரிதான், ஆனால் 1 ம் பிரதிவாதி மகாராஜன் கிராம நிர்வாக அலுவலராக இருந்தார். பிரதிவாதிகள் குடும்பத்தை எனக்கு நன்கு தெரியும். பிரதிவாதிகள் சர்வே எண்.8/3 ல் கட்டப்பட்ட 4-1/2 ஏக்கர் நிலத்திலும் உழவடை செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல, சின்னகருப்பன் வழக்கறிஞர் தான் அதில் விவசாயம் செய்து வந்தார். சின்னகருப்பன் அவர்கள் குடும்பத்தினர் யாருக்கும் விவசாய தொழிலே தெரியாது என்றால் சரியல்ல, அவர்கள் தான் விவசாயம் செய்து வந்தார்கள்.

2. சின்னகருப்பன் அவர்கள் குடும்பத்தில் உள்ள மகேஸ்வரி என்பவருக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ள பவர் பத்திரம் மற்றும் அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் ஆகியவற்றில் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தன் அடிப்படையில் 1 ஏக்கர் 82 செண்டு சின்னகருப்பன், செல்வத்திற்கு விற்பனை செய்த விவரம் மட்டும் தெரியும், அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். வாதி செல்வம் எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் மனை வாங்கி விற்பதில் எனக்கு அறிமுகம். வாதி செல்வம் கிராமத்தில் விவசாயமும், மதுரையில் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறார். தாவா சொத்தை வாதி கிரயம் வாங்கியபின்பு எப்போதாவது விவசாயம் செய்தாரா என்றால் பிரதிவாதிகள் அவர்களை விவசாயம் செய்யவிடாமல் தடுத்துவிட்டனர். அதன் பின்னர் அவர்கள் விவசாயம் செய்தார்களா என்றால் இல்லை, பிரச்சினையாகி வழக்கு தொடுத்துவிட்டார்கள். பிரதிவாதிகள் தான் தாவா சொத்தில் தற்போது வரை விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வாதி செல்வம் எனக்கு நன்கு பழக்கப்பட்டவர் என்ற அடிப்படையில் அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.